[1972 ஆகஸ்ட் 21

Arunachalam Chettiar Memorial Maternity Hospital, Paganeri, Ramanathapuram District

* 131 Q.—Thiru P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware that expectant mothers are not admitted for confinement in Arunachalam Chettiar Memorial Maternity Hospital, Paganeri, Ramanathapuram district as there is neither an operation theatre nor a kitchen room in the Hospital; and

(*b*) if so, the steps to be taken thereon?

இராமனுதபுரம் மாவட்ட பாகனேரியில் உள்ள அருணுசலம் செட்டியார் நினைவு மகப்பேறு மருத்துவமனை.

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமனுதபுரம் மாவட்டம் பாகனேரியில் உள்ள அருணுசலம் செட்டியார் நினைவு மகப்பேறு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை (Operation Theatre) அறையும், சமையல் அறையும் இல்லாத காரணத்தால் பிரசவத்துக்கு வரும் தாய்மார்கள் அங்கு அனுமதிக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) அறுவை சிகிச்சை அறையும் சமையல் அறையும் இல்லாத காரணத்தினுல் நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை என்ற புகார் ஏதும் பொதுமக்களிடமிருந்து இதுவரை வரவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. திருஞானசம்பந்தம்: தலைவரவர்களே, அங்கே அனுமதிக்கப்படுகின்ற பிரசவத்திற்கு வருகின்ற தாய்மார்களுக்கு, வெந்நீர் வைத்துக்கொடுக்கக் கூட எந்த வசதியும் கிடையாது. அதே போல, ஆபரேஷன் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அப் படிப்பட்ட நிலையில் அங்கே எந்த வசதியும் இல்லாத காரணத்தால், உடனடியாக பெரிய மருத்துவ மனைக்குக் கொண்டு செல்ல வேண்டி யிருப்பதால், இதில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டு கிறேன்.

1972 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, வெந்நீர் வைத்துக் கொடுப்பதற்கெனச் சமையலறை கட்டுவதற்கான செலவுக்கு இந்த அரசுக்கு இன்றைய நிலையில் நிதி வசதி இல்லை. அடுத்து, சிவகங்கையில் 50 படுக்கைகள் கொண்ட ஒரு பெரிய மருத்துவமனை இருக்கிறது. இந்த பாகனேரி மருத்துவ மனையைப் பொறுத்த வரையில் சாதாரணப் பிரசவம் போன்றவற்றிற்கு வருகின்ற நோயாளிகளைக் கவனிக்கின்ற நிலையில்தான் இருக்கிறது. அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அந்த நோயாளிகளைச் சிவகங்கை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லுவதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். தென்னரசு : தலைவரவர்களே, சிவகங்கை மருத்துவ மனை, இந்த அரசாங்கத்தின் பெரு முயற்சியால் கட்டப்பட்டதாகும். இந்த மருத்துவ மனையைச் சுற்றிலும் சுகாதாரக் குறைவான தேநீர்க் கடைகள் இருப்பதை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு இந்தக் கடைகளை அரசு ஆர்ஜிதம் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதுபற்றி அந்தத் துறைக்குத் தெரிவிக்கப்படும்.

Madurai Medical College.

* 132 Q.—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the posts of Assistant Reader in Pharmaceutics, Pharmacognosy and non-Medical Assistant in Pharmacology are lying vacant in the Madurai Medical College;

(b) if so the period for which they are kept unfilled; and

(c) the reasons therefor?

மதுரை மருத்துவக் கல்லூரி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மருந்து தயாரிப்பு இயல் (Pharmaceutics) மருந்து ஆய்வியல் (Pharmacognosy) ஆகிய துறைகளில் ஆராய்ச்சித் துறை உதவித் துணைப் பேராசிரியர் பதவிகளும், மருந்தியலில் மருத்துவம்